**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **34**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெயந்தி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A6, A7, A11, A12, A14, A15, A16, A17, A22, A 24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **21.02.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மாலையான் தெருவில் குடியிருக்கிறேன். என் கணவர் இறந்துபோனார். 17.12.2006 அன்று அவரை சிலர் கொலை செய்துவிட்டார்கள். எனது கணவருடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர் ஆண்மக்கள், 4 பெண்மக்கள் ஆவார்கள். மூத்தவர்-திருப்பதி, 2 வது-சக்திப்பாண்டியன் அதை அடுத்து சேகர் அதை அடுத்து ரவி, அதன் பின்னர் என் கணவர் குமார் பாண்டியன் அதை அடுத்து சுரேஷ் மற்றும் செந்தில் ஆண்மக்கள் ஆவார்கள். அவர்களில் 4 நபர்கள் இறந்துபோனார்கள். முதலில் இறந்தவர் குமார் பாண்டியன் ஆவார். மற்ற 3 நபர்கள் 14.08.2007 அன்று கொலை செய்யப்பட்டு இறந்துபோனார்கள். என் கணவர் தென்காசியில் கோவிலுக்கு எதிரில் பள்ளிவாசல் கட்டும் பிரச்சனையில் கொலை

செய்யப்பட்டு இறந்தார். மற்ற மூவரும் கொலை செய்யப்பட்டு இறந்தார்கள். என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. என் கணவர் இறக்கும்போது நான் குழந்தை பிறப்பிற்காக என் பெற்றோர் வீட்டிற்கு சென்றிருந்தேன். மற்ற மூவரும் இறந்தபோது நான் என் பெற்றோர் வீட்டில் தான் இருந்தேன். என் பெற்றோர் வீடு வி.கே.புதுார் தாலுகாவில் உள்ள வீராணம் கிராமத்தில் உள்ளது அது என் கணவர் வீட்டில் இருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இடைப்பட்ட காலத்தில் நான் தென்காசிக்கு வரவில்லை. வி.டிஎஸ்.ரகுமான் பாட்ஷா மற்றும் கமால் மைதீன் ஆகிய இருவரையும் தெரியும். அவர்கள் தான் என் கணவர் இறப்பிற்கு காரணம். என் கணவர் இறந்தபின்னர் அவர்களை நான் பார்க்கவில்லை. கார் எண் ஞாபகம் இல்லை. என் கணவருக்கு சொந்தமான காரை அவர்தான் வைத்திருந்தார். அவர் இறந்தபின்னர் அந்த காரை என் கணவரின் வீட்டிலேயே நிறுத்தி இருந்தேன். அந்த காரை யார் எடுத்து பயன்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் இறந்தபின்னர் அரசாங்கத்திடம் கருணை அடிப்படையில் வேலை கேட்டு விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்பத்தில் என் கணவரின் இறப்பிற்கு காரணம் அவர் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டார் என்று கூறியிருந்தேன். என் கணவர் இறப்பதற்கு முன்னர் மசூதி கட்டுவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு அதன் காரணமாக குற்றலாத்தில் உள்ள ஒரு பங்களாவில் என் கணவரை வி.டி.எஸ்.ஆர் ரகுமான் பாட்சாவும், கமாலும் பேசியுள்ளார்கள். அப்போது அவர்கள் மசூதி

கட்டும் பிரச்சனையில் நீ தலையிடாதே என்று என் கணவரை எச்சரித்ததாக என் கணவர் என்னிடம் கூறியிருந்தார். என் கணவர் கொலை வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த சாட்சியத்தில் என் கணவர் இறப்பிற்கு யார் காரணம் என்று நான் கூறியிருக்கிறேன். வி.டி.எஸ்.ஆர் ரகுமான் பாட்சா மற்றும் கமால் ஆகியோர் என் கணவரின் இறப்பிற்கு காரணம் என்று கூறியிருக்கிறேன். என் கணவர் இந்து முன்னணி அமைப்பின் தென்காசி நகரத்தின் தலைவராக பொறுப்பில் இருந்தார். என் கணவருக்கு சொந்தமான காரை என் கணவரின் சகோதரர் சக்திபாண்டியன் 14.08.2007ம் தேதி பயன்படுத்தி வந்தார் என்றும் அதிகாலையில் அதை எடுத்து சென்றார் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரின் சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்து அம்பாசிட்டர் வாகனம் கைப்பற்றப்பட்டதாக கேள்விப்பட்டேன். (மேற்கண்ட கேள்விகள் காவல் துறையினரின் விசாரணையின் போது சாட்சியிடம் கேட்கப்படாத விபரங்கள் என்றும் எனவே அவற்றை தற்போது குறுக்கு விசாரணை என்ற பெயரில் அரசு தரப்பில் கேள்வியாக கேட்க எதிரி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் என் கணவர் இறக்கும் சமயத்தில் 2வது குழந்தை பிறப்பிற்காக சென்றிருந்தேன். என் கணவர் இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் நான் குழந்தை பிறப்பிற்காக பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். என் கணவர் இறந்த விபரத்தை நான் கேள்விப்பட்டு தான் வந்து பார்த்தேன். எனக்கு இரவு 10.00 மணிக்கு தகவல் கிடைத்தது. பக்கத்து வீட்டிற்கு (முருகன் என்ற செட்டியார் வீட்டிற்கு) போன் மூலம் தகவல் வந்தது. நான் இரவே தென்காசிக்கு வந்து மறுநாள் காலையில்

மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். வி.டி.எஸ்,ரகுமான் பாட்சா மற்றும் கமால் ஆகியோரை நான் நேரில் பார்த்ததில்லை. குற்றாலம் அருகில் உள்ள ஒரு பங்களாவில் என் கணவரை மேற்படி இருவரும் மிரட்டியது தொடர்பாக என் கணவர் இறப்பிற்கு முன்னதாக நான் யாரிடமும் கூறவில்லை. என் கணவர் முன்னதாக பி.ஜே.பி. மற்றும் இந்து மக்கள் கட்சி மற்றும் இந்து முன்னணி இயக்கங்களில் உறுப்பினராக இருந்தார். என் கணவர் ஒவ்வொரு அமைப்பில் இருந்தும் மாறி மாறி வந்ததற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. என் கணவர் அவ்வாறு பல அமைப்புகளில் உறுப்பினராக இருந்து வட்டி தொழில் செய்து வந்தும் கட்டப்பஞ்சாயத்து செய்வதும் கான்டிராக்ட் பெறுவதுமாக போன்ற வேலையாக இருந்ததால் அவருக்கு பல வகையில் எதிரிகள் இருந்தனர் என்றால் சரியல்ல. தென்காசி மற்றும் குற்றாலம் பகுதியில் கார், வாகனங்கள், சைக்கிள் நிறுத்தும் இடங்களை குத்தகைக்கு எடுத்து அதில் பணம் வசூலிக்கும் வழக்கம் என் கணவர் குடும்பத்தினருக்கு உண்டு என்றால் சரியல்ல. என் கணவருடன் வசித்த காலத்தில் என் கணவர் குடும்பத்திற்கும் எனக்கு நல்ல உறவு முறை தான் இருந்தது. தற்போதும் அதே சுமூக உறவு முறை தான் இருந்து வருகிறது. என் கணவரின் தகப்பானர் சொர்ணத்தேவருக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். 2 வது மனைவி மூலம் 3 குழந்தைகள் உள்ளனர். சொர்ணத்தேவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். என் மாமனார் சொத்துக்களை பங்கு பிரிப்பதில் முதல் மனைவி மற்றும் 2 வது மனைவி குழந்தைகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல. என் கணவர் குடும்பத்தை சேர்ந்த ரவி என்பவர் தென்காசி ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் வெடிகுண்டு வீசி அந்த இடத்தில் முஸ்லீம்கள் பயன்படுத்தும் குல்லா மற்றும் ஒட்டு தாடி ஆகியவற்றை அங்கு போட்டு

இஸ்லாமியர்கள் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் குண்டு வீசியது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார் என ரவி என்பவர் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். என் கணவர் குடும்பத்தினர் தென்காசியில் தனியே கேபிள்டிவி நிறுவனம் நடத்தி வந்தனர் என்றால் சரிதான். என் கணவர் நடத்தும் கேபிள் டிவிக்கு போட்டியாக யாரேனும் கேபிள்டிவி நடத்தினால் அவர்களை தாக்குவதை வழக்கமாக கொண்டிருந்தனர் என்றும் அதனால் என் கணவர் குடும்பத்தினர் மீது வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல. சக்திபாண்டியன் மற்றும் என் கணவர் குடும்பத்தினர் மீது ஒரு கேபிள் டிவி உரிமையாளரை தாக்கி கொலை செய்ததாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. கமால் மற்றும் ரகுமான் பாட்சா என்ற இருவரும் குற்றாலம் பங்காளவில் என் கணவரை மிரட்டியதாக தற்போது தான் முதன் முதலாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் என் கணவர் கொலை வழக்கிலும் இதே விபரத்தை கூறியிருக்கிறேன். நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் தற்போது கமால் மற்றும் ரகுமான் பட்சா மீது போலீசார் சொல்லி கொடுத்து புதிதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரின் குடும்பத்தினர் பல்வேறு சட்டவிரோத செயல்களை செய்து வந்தனர் என்றும் அவர்கள் மீது பலரும் விரோதம் கொண்டிருந்தனர் என்றும் அதன் காரணமாக என் கணவர் யாராலோ கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் அதை எங்கள் கணவர் குடும்பத்தினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் நோக்கத்துடன் இஸ்லாமியர் மீது வீண் பழி சுமத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்ததற்காக

கருணை அடிப்படையில் வேலை கேட்டு விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்பத்தை நான் தான் எழுதிக்கொடுத்தேன். நான் அரசு வேலை வாங்குவதற்காக பொய்யான விபரங்களை கூறி இஸ்லாமியர்கள் மீது பழி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.